செய்தி வெளியீடு எண். 166 நாள் : 24.03.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில், ஆற்றுப்படுக்கை மற்றும் பட்டா நிலங்களில் உரிய அனுமதியின்றி கனிமங்களை எடுப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஆற்றுப்படுகைகள் அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் பட்டா நிலங்களில் உரிய அனுமதியின்றி கள்ளத்தனமாக கனிமங்களை வாகனங்களில் எடுத்துச் செல்வது தொடர்பாக, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப,. அவர்களது உத்தரவினபேரில், கடந்த இரண்டு மாதங்களில், இம்மாவட்டத்தில் குசஸ்தலை ஆறு மற்றும் ஆரணி ஆறு செல்லும் கிராம பகுதிகள், திருக்கண்டலம், ஆரிக்கம்பேடு, சோழவரம், காரனோடை, காட்டாவூர், பூதூர், புழல், ஏலியம்பேடு, தும்பாக்கம், சித்துக்காடு, ஆரம்பாக்கம் மற்றும் பிற பகுதிகளில் வருவாய் துறையினர், கனிமவளத்துறையினர் மற்றும் காவல் துறையினர் ஆகியோரால் தீவிர ரோந்து பணிகள் மேற்கொண்டதில், உரிய அனுமதியின்றி மணல், சவுடுமண் மற்றும் கிராவல் மண் ஆகியவற்றை உரிய அனுமதியின்றி ஏற்றிச்சென்ற குற்றத்திற்காக, 177 வாகனங்கள் மற்றும் 42 மாட்டு வண்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பாக, கடந்த இரண்டு மாதங்களில் கனிமவள விதிகளின்படி அபராத தொகையாக சுமார் ரூ.29,00,000/- அரசுக்கணக்கில் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், இக்குற்றச்செயல் தொடர்பாக சம்மந்தப்பட்டோர் மீது காவல்துறையினரால் 74 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே, ஆற்றுப்படுகைகள், அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் பட்டா நிலங்களில் உரிய அனுமதியின்றி கனிமங்கள் எடுத்துச் செல்லும் வாகன உரிமையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன், இக்குற்றச்செயலில் ஈடுபடும் வாகன ஓட்டுநர்களின் உரிமம் ரத்து செய்யப்படும் என திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~